



## தொடங்கியது எம்.ஆர்.டி. ரயில் சேவை

# ஒரு மாத காலம் இலவசப் பயணம்

## பிரதமர் அறிவித்த இனிப்பான செய்தி

கோலாலம்பூர்,டிச.16–
எம்.ஆர்.டி. துரித ரயில் சேவையின் முதற்கட்டப் பயணத்தை நேற்று பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

இன்று தொடங்கி வரும் 2017ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் தேதி வரையில் ஒரு மாத காலத்திற்கு இந்த ரயில் சேவையைப் பயணிகள் இலவசமாகப் பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 2,100 கோடி வெள்ளி

13ஆம் பக்கம் பார்க்க

### தொடங்கியது எம்ஆர்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி...

செலவில் நிர்மாணிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் பட்டது. எனினும் மதிப்பிடப்பட்ட தொகையைக் காட்டிலும் இந்தத் திட்டத்தில் 200 கோடி வெள்ளி குறைவாகவே செலவிடப்பட்டிருக்கிறது. அதாவது 200 கோடி வெள்ளி மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பிரதமர் கூறினார்.

சிலாங்கூர் குவாசா டாமன்சாராவில் நேற்று எம்.ஆர்.டி. ரயில் திட்டத்தின் முதற்கட்டப் பயணச் சேவையை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்த பின்னர் அவர் இந்த விவரங்களை வெளியிட்டார்.

12 நிலையங்களை உட்படுத்திய இந்தப் பயணச் சேவையைப் பயணியருடன் இணைப்பதற்காக 120 ஊடுச் சேவைப் பேருந்துகளும் அறிமுகப்படுத் தப்பட்டிருக்கின்றன. அந்தப் பேருந்துகளிலும் பயணிகள் இந்த ஒரு மாத காலத்திற்கு இலவசமாகப் பயணம் செய்யலாம். இதன் முதல் சேவை இன்று காலை 6 மணிக்குத் தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.